2014 *டிசம்பர்* 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

மீன் பதனிடும் பூங்கா

***22849— திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை அன்னங்கோயில் பகுதியில் மீன் பதனிடும் பூங்கா மற்றும் வலை பின்னும் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் இல்லங்களிலும், நெஞ்சங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிற மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை அன்னங்கோயில் அவசரகால சுனாமி மறுவாழ்வு திட்டத்தின்கீழ் ரூபாய் 18 கோடியே 91 இலட்சம் மதிப்பீட்டில் உள்கட்டமைப்புகளான படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், படகு அணையும் சுவர், மீன்களைச் சுகாதாரமாகக் கையாளுவதற்கும், பிடிக்கப்படும் மீன்களை ஏலம் விடுவதற்காக நவீன வசதிகளுடன்கூடிய மீன் ஏலக் கூடங்கள், மேலும் பனிக்கட்டி நிலையம், மீன் வலை பின்னும் இடம், வலை பாதுகாப்பு அறை மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற நவீன வசதிகளுடன், மீனவர்களின் நலனுக்காக மீன் இறங்குதளம் கட்டி முடிக்கப்பட்டு, கடந்த 27-6-2014 அன்று தமிழக மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டு மீனவர்களின் பயன்பாட்டில் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை அரசால் கைது செய்யப்பட்டு, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட தங்கச்சிமடத்தைச் சேர்ந்த 5 அப்பாவி தமிழக மீனவர்களின் தூக்குத் தண்டனையை இரத்து செய்ய பெருமுயற்சிகள் எடுத்தும், அதற்கான வழக்குச் செலவுகளை (மேசையைத் தட்டும் ஒலி) அரசே முழுவதும் ஏற்றும், அவர்களின் உயிரைக் காப்பாற்றியும், அவர்களுடைய குடும்ப வாழ்வாதாரத்திற்கு தலா ரூ.3 இலட்சம் நிதியுதவி அளித்தும், மீனவ சமுதாய மக்களின் விடிவெள்ளியாகத் திகழும் மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 11-15

பரங்கிப்பேட்டை, அன்னங்கோயில் பகுதியில், சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் அந்தப் பகுதிவாழ் மக்களின் நலன் கருதி அனைத்து நவீன வசதிகளுடன்கூடிய மீன் இறங்குதளமும், ஏலக் கூடமும் மீனவ சமுதாய மக்கள் எதிர்பார்க்காதவண்ணம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்து கொடுத்துள்ளது. அதனால் அப்பகுதி மீனவ மக்களின் சார்பாக என்னுடைய கோடானுகோடி நன்றிகளை மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் காணிக்கையாக்குகிறேன். அன்னங்கோயில் பகுதியில் அதிக மீன் வரத்து உள்ள காலங்களில் அதிக விலை கிடைக்காதபட்சத்தில், மீன் பதப்படுத்துவதற்காக மீன் குளிர்பதனிடும் கிடங்கு அமைத்துக் கொடுத்தால் அன்னங்கோயில் பகுதியைச் சுற்றியுள்ள 20-க்கும் மேற்பட்ட மீனவ கிராம மக்கள் பொருளாதார வளர்ச்சி அடைவார்கள். அதனால் அப்பகுதிவாழ் மீனவ மக்களின் நலன் கருதி, அங்கு குளிர்பதனக் கிடங்கு அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

2014 டிசம்பர் 4]

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையாற்றும்போது இலங்கைச் சிறையில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 5 மீனவர்களின் உயிரை காப்பாற்றி மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள், அவர்களுக்கு தலா ரூ.3 இலட்சம் வழங்கினார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, 5 மீனவர்கள் 29-11-2011 அன்று கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்ட காலத்திலிருந்து விடுதலை செய்யப்பட்டு வரும்வரை, ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும் நாள் ஒன்றுக்கு ரூ.250 வீதம் ரூ.2.77 இலட்சம் கொடுத்த பெருமை மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, அவர்களுடைய குழந்தைகளின் படிப்புச் செலவிற்காக அவர்களை கோட்டைக்கு அழைத்து, தலா ரூ.2 இலட்சம் கொடுத்தவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 'தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது' என்ற அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடன் அவர்களுக்கு நீதிமன்றத்தின் மூலமாக நிரபராதி என்று நிரூபிக்கப்படுவதற்காக, வழக்குச் செலவிற்காக ரூ.20 இலட்சம் நிதியை உடனடியாகக் கொடுத்தவர் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு மீனவர்களுக்கும், மீனவ சமுதாயத்திற்கும் மட்டுமல்லாமல், தமிழ்நாட்டு மக்களுக்கும் விடிவெள்ளியாக, கலங்கரை விளக்கமாக திகழ்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி 2011-2012 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் தமிழகத்தில் 13 கடலோர நகரங்களில் அரசு மற்றும் தனியார் பங்களிப்போடு மீன் பதனிடும் பூங்காக்கள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதன் முதல் கட்டமாக கடலூர் மாவட்டம், பெரியகங்கணங்குப்பத்தில் மீன் பதனிடும் பூங்கா அமைப்பதற்கு 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, செய்யத்தக்கமைக்கான

ஆய்வு நிறைவேற்றப்பட்டு, தனியார் பங்களிப்பாளரைத் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு கடலோர மாவட்டத்திற்கும் ஒரு மீன் பதனிடும் பூங்கா அமைக்கப்படவுள்ளதால், புவனகிரி தொகுதி, அன்னங்கோயில் பகுதி மீனவர்களும் கடலூர் மாவட்டம், பெரியகங்கணங்குப்பத்தில் அமைக்கப்படவுள்ள மீன் பதனிடும் பூங்காவின் மூலம் பயனடையலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.*

திருமதி செல்வி ராமஜெயம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் மக்களின் முதல்வர் அவர்களால் பரங்கிப்பேட்டை, அன்னங்கோயில் பகுதியில் மீன்பிடி இறங்குதளம் அமைக்கப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. தற்போது அந்தப் பகுதியில் எஸ்.ஆர்.பி. படகுகள் 200, லம்பாடி படகுகள் 300, ஐ.வி. படகுகள் 10 என 500-க்கும் மேற்பட்ட படகுகள் உள்ளன. அந்தப் படகுகளை நிறுத்துவதற்குப் போதுமான இடம் அந்த இறங்குதளத்தில் இல்லாத காரணத்தால், ஐ.வி. படகுகள் மற்றும் எஸ்.வி. படகுகள் போன்ற படகுகளை கடலூர் துறைமுகத்தில் நிறுத்தவேண்டிய சூழ்நிலை உள்ளது. அதனால் இந்த மீன்பிடி இறங்குதளத்தை விரிவாக்கம் செய்வதற்கு போதுமான இடவசதி உள்ள காரணத்தாலும், அந்தப் பகுதிவாழ் மீனவ மக்களின் நலன் கருதியும், அந்த மீன் இறங்குதளத்தை மீன்பிடித் துறைமுகமாக தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று அமைத்துத் தருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர், பரங்கிப்பேட்டை, அன்னங்கோயில், வெள்ளாறு பகுதிகளிலே உள்ள 17 கிராம மக்கள் அந்த வெள்ளாறு*

2014 டிசம்பர் 4]

முகத்துவாரத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். அந்தப் பகுதியிலே 896 கண்ணாடி நாரிழைப் படகுகள் (FRP Boat), *131 நாட்டுப் படகுகள் மற்றும் 6 விசைப் படகுகள் மட்டுமே இருக்கின்றன. ரூபாய் 18 கோடியே 91 இலட்சம் செலவிலே 3 மீன் ஏலக் கூடங்கள், வலை பின்னும் கூடம், வலை இருப்புக் கூடம், கழிவறை மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் போன்ற அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளிலே மீன்கள் உள்ளூர் தேவைக்கே போதுமானதாக இல்லை. ஆக, உள்ளூர் தேவைக்குப் போக, மீன்கள் மீதம் இருக்கும்பட்சத்தில், கடலூர் மாவட்டத்தில் ரூ.12 கோடி மதிப்பீட்டில் கங்கணங்குப்பத்தில் தனியார் பங்களிப்போடு அமைக்கப்படவிருக்கின்ற* Fish Processing Park-*ஐ பயன்படுத்திக்கொள்ளலாம். கடலூர் மாவட்டத்தில் மீன் பதனிடும் பூங்கா அமைக்கப்படுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, எல்லா நிலையிலும் தயார் நிலையில் உள்ளது. ஆக, ஒப்பந்ததாரர்கள் கோரப்பட்டிருக்கின்றார்கள். அந்த ஒப்பந்ததாரர்கள் அமர்த்தப்பட்ட பின்னரே, அந்தப் பணி துவங்கப்பட்டு, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைப் பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

வருவாய் ஆய்வாளர் அலுவலகம்

***5794— திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர் தொகுதி, பன்னந்தூரில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்தை ஆளுகிற ஆற்றல் பெற்றிருக்கின்ற, தமிழினம் காப்பதற்காக இப்பூவுலகிலே*